செ.வெ.எண்:39/2017 நாள்:21.12.2017

# சிவகங்கை மாவட்டம்

## திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மிக்கேல்பட்டிணம் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்று பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மிக்கேல்பட்டிணம் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். உடன் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.கருணாகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மிக்கேல்பட்டிணம் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்று பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இக்கிராமச் சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்தாவது,

ஜனவரி’2018 சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மிக்கேல்பட்டிணம் பஞ்சாயத்தில் 50 பயனாளிகளுக்கு கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் விலையில்லா பசு மற்றும் கன்று ஒன்றும் வழங்கப்படவுள்ளது.

12.12.2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்பு கிராமச் சபைக் கூட்டத்தில் பயனாளிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டது. அதனடிப்படையில், இன்று (21.12.2017) பெறப்பட்ட 113 மனுக்களில் (ஆதிதிராவிடர் பிரிவைச் சார்ந்த 24 மனுக்களும், பிற்படுத்தப்பட்டோர் பிரிவைச் சார்ந்த 89 மனுக்களும்) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து 20 ஆதிதிராவிடர் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளில் முன்னுரிமை அடிப்படையில் (மாற்றுத்திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள்) ஆகிய 9 பயனாளிகளும், மேலும், பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளில் முன்னுரிமை அல்லாதவர்கள் 21 பயனாளிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் எனவும், காத்திருப்போர் பட்டியலில் 6 பயனாளிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இப்பயனாளிகள் தேர்வின் போது கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.கருணாகரன், உதவி இயக்குநர் மரு.மோகன்தாஸ், சிவகங்கை வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.